# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
# JAFFNA HINDU COLLEGE
## OLD BOYS' ASSOCIATION


தலைவர்
திரு. சி. சுந்தரேஸ்வரன்
(0777 583377)

செயலாளர்
Dr தி. சிறிகரன்

பொருளாளர்
திரு. மு. கணேசராஜா

உபதலைவர்
திரு. ஐ. தயானந்தராஜா (அதிபர்)
Dr. பூ. லக்ஸ்மன்
பேரா. மா. சின்னத்தம்பி
Dr. கோ.திருக்குமரன்
திரு. சு. டிவகலாலா
Dr. செ. கண்ணதாசன்

உபசெயலாளர்
Dr. ப. நந்தகுமரன்

உப பொருளாளர்
திரு. லி. கேதீஸ்வரன்

பத்திராதிபர்
திரு. த. அருணகிரிநாதன்

குழு அங்கத்தவர்கள்
Dr. ஏ. தேவநேசன்
திரு. கு. கௌதமன்
திரு. இ. குகானந்தன்
திரு. த. தவரூபன்
திரு. பா. மிரோஜன்
திரு. பொ. சிறிஸ்கந்தராஜா
திரு. செ. தேவரஞ்சன்
திரு. க. கை. விக்னேஸ்வரன்
திரு. ம. அருள்குமரன்
திரு. அ. சியாமளரூபன்
திரு. க. கமலரூபன்
திரு. பா. சிறிதரன்
திரு. ம. தயாகரன்
திரு. த. சிவரூபன்
திரு. தி. கௌசிகன்
திரு. வை. கந்தப்பா
திரு. த. சுஜீவன்
Dr. கோ. ரஜீவ்


14/09/2015.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
யாழ்ப்பாணம்.

கனம் அதிபர் அவர்களுக்கு,

**125வது ஆண்டு விழா நிகழ்வுகளில் இருந்து விலகியிருத்தல்**

125வது ஆண்டு விழா நிகழ்வுகள், திரு. ஜெ. ஸ்ரீரங்காவின் பிரசன்னத்தை முதன்மைப் படுத்தி, அவரைப் பிரபல்யப் படுத்தும், மறைமுக நிகழ்ச்சி நிரலுடன், ஒழுங்கமைக்கப் பட்டு வருவதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் முகமாக,125வது ஆண்டு விழா நிகழ்வு ஒழுங்கமைப்பு உப குழுவிலிருந்து எமது பிரதிநிதிகளை மீளப் பெறுவது என்ற தீர்மானத்தை, எமது 25/08/2015 திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாகத் தங்களுக்கு அறியத் தந்திருந்தோம்.

எமது எதிர்ப்பையும், கரிசனைகளையும் கருத்திலெடுக்காது, திரு. ஸ்ரீரங்காவை முதன்மைப் படுத்தும் நிகழ்ச்சி நிரல் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டு வருவதை நாம் மிக விசனத்துடன் அவதானித்து வருகிறோம்.

'பணம், செல்வாக்கு, அதிகாரம் என்பவற்றை அநுசரித்து நடப்பதே யதார்த்தமானது. உலகப் பொதுவான நல்ல பண்புகளையும், விழுமியங்களையும் கைக் கொள்வது காலப் பொருத்தமற்றது. இலட்சியங்களும், நல் விழுமியங்களும் அர்த்தமற்றவை.'

'நாம் எதனை அடைய விரும்புகிறோமோ அவற்றை அடைவது தான் முக்கியம். அவற்றை அடைய நாம் கைக்கொள்ளும் வழி முறைகள் சரியானவையாக இருக்க வேண்டுமென்பதில்லை. நல் வழியல்லா வழியினூடாகவேனும் நாம் அடைய நினைப்பவற்றை அடைய வேண்டும். அதிற் தவறொன்றுமில்லை'

என்பதான செய்திகளின் குறியீடாகவே இந்த முதன்மைப் படுத்தல் விளங்கவுள்ளது. இக் குறியீட்டை அரங்கேற்றும் களமாக யாழ். இந்துவின் 125வது ஆண்டு நிறைவு விழா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
# JAFFNA HINDU COLLEGE
## OLD BOYS' ASSOCIATION


தலைவர்
திரு. சி. சுந்தரேஸ்வரன்
(0777 583377)

செயலாளர்
Dr. தி. சிறிகரன்

பொருளாளர்
திரு. மு. கணேசராஜா

உபதலைவர்
திரு. ஐ. தயானந்தராஜா (அதிபர்)
Dr. பூ. லக்ஸ்மன்
பேரா. மா. சின்னத்தம்பி
Dr. கோ. திருக்குமரன்
திரு. சு. டிவகலாலா
Dr. செ. கண்ணதாசன்

உபசெயலாளர்
Dr. ப. நந்தகுமரன்

உப பொருளாளர்
திரு. வி. கேதீஸ்வரன்

பத்திராதிபர்
திரு. த. அருணகிரிநாதன்

குழு அங்கத்தவர்கள்
Dr. ஏ. தேவநேசன்
திரு. கு. கௌதமன்
திரு. இ. குகானந்தன்
திரு. த. தவரூபன்
திரு. பா. மிரோஜன்
திரு. பொ. சிறிஸ்கந்தராஜா
திரு. செ. தேவரஞ்சன்
திரு. க. கை. விக்னேஸ்வரன்
திரு. ம. அருள்குமரன்
திரு. அ. சியாமளரூபன்
திரு. க. கமலரூபன்
திரு. பா. சிறிதரன்
திரு. ம. தயாகரன்
திரு. த. சிவரூபன்
திரு. தி. கௌசிகன்
திரு. வை. கந்தப்பா
திரு. த. சுஜீவன்
Dr. கோ. ரஜீவ்


சுதேசியத்தினதும், தேசியத்தினதும் குறியீடாக விளங்கிய யாழ். இந்துக் கல்லூரியே இவ்வாறான வழி முறைகளை அங்கீகரித்து விட்டது. இனி அனைவரும் இவ்வழியைப் பின்பற்றுங்கள் என்பதான செய்தியை இவ்வரங்கேற்றம் சுட்டி நிற்கவுள்ளது.

125வது விழா நிகழ்வைக் குழப்புவது எமது நோக்கமன்று. எனினும் தவறான செய்திகளின் குறியீடாக, தவறான சமிக்ஞையை வழங்கும் நிகழ்வாக அந்நிகழ்வு அமையப் போவது குறித்த எமது எதிர்ப்பைப் பதிவு செய்வதும், வெளிப்படுத்துவதும் எமது தார்மீகக் கடமை என நாம் கருதுகிறோம்.

எனவே நேற்று (13/09/2015) நடைபெற்ற எமது ஆட்சிக் குழுக் கூட்டத்தில் நாம் ஏகமனதாக மேற்கொண்ட தீர்மானத்தின் படி, இவ் விழா ஒழுங்கமைக்கப் பட்டுள்ள முறையின் காரணமாக, இவ்விழாவிற்கான எமது ஒத்துழைப்பையும், எமது சம்மதத்தையும் நாம் பூரணமாக விலக்கிக் கொள்வதுடன், இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் 23, 24, 25, 27ம் திகதிகளில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ள விழா நிகழ்வுகளை முழுமையாகப் புறக்கணிக்கவும் தீர்மானித்துள்ளோம் என்பதனைத் தங்களுக்கு அறியத் தருகிறோம்.

நன்றி.

சி. சுந்தரேஸ்வரன்
தலைவர்
பழைய மாணவர் சங்கம்.